**செய்தி வெளியீடு எண்: 415** **நாள்: 27.06.2018**

**செய்தி வெளியீடு**

**29.06.2018 அன்று காவல்துறையின் சார்பில் நடைபெற உள்ள இரத்த தானம் முகாம் பற்றிய விளக்கம்**

29.06.2018–ம் தேதி சுமார் 20,000 காவல் ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகள் தங்களுடைய விருப்பத்தை தெரிவித்து தாமாகவே முன்வந்து இரத்த தானம் கொடுக்க உள்ளனர். நமது மாநிலத்தில் ஆண்டிற்கு 8,00,000 யூனிட்ஸ் இரத்தம் தேவையுள்ளது, இதில் சுமார் 50 சதவீதம் இரத்தம் ( 4 லட்சம் யூனிட்ஸ்) 89 அரசு இரத்த வங்கிகளில் சேகரிக்கப்படுகிறது மீதமுள்ள 50 சதவீதம் இரத்தம் (4 லட்சம் யூனிட்ஸ்) தனியார் இரத்த வங்கிகளில் சேகரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 33,000 முதல் 35,000 யூனிட்ஸ் வரை தேவைப்படுகிற இரத்தம், 89 அரசு இரத்த வங்கிகள் மறறும் தனியார் இரத்த வங்கிகள் மூலம் நம் மாநிலம் முழுவதும் வழங்கப்படுகிறது. மே மாதத்தில் பொதுவாக கல்லூரி விடுமுறையாக இருப்பதாலும், கொடையாளிகள் இரத்தம் கொடுப்பது குறைவாக இருப்பதாலும் ஜீன் மாதத்தில் இரத்தம் அதிகமாக தேவைப்படும். எனவே, ஜீன் மாதத்தில் காவல்துறையால் வழங்கப்படவுள்ள 20,000 யூனிட்ஸ் இரத்தம் மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும், சராசரியாக ஒரு மாத பயன்பாட்டிற்கு தேவைப்படுகிற 33,000 முதல் 35,000 யூனிட்ஸ் வரை இரத்தத்திற்கு, 29.06.2018 அன்று காவல்துறையால் திட்டமிடப்பட்ட இரத்ததான முகாமில் வழங்கப்படவுள்ள 20,000 யூனிட்ஸ் இரத்தம் ஒருபோதும் வீணாகப் போவதில்லை. இந்த இரத்தம் ஏழை எளியவர்களுக்கு அரசாங்க மருத்துவமனைகளில் உபயோகப்படுத்தப்பட உள்ளது என்று திரு. கே. செந்தில்ராஜ், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் மற்றும் இரத்த பரிமாற்ற குழுமம், சென்னை மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் இந்த தகவலை தெரிவித்துள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**